DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Village | குருப்பேறி மந்தை |
| Father's Name | நடேசன் | Taluk | திருப்பத்தூர் |
| Age | 49 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 15.07.2026

**O.S. No. 91 /2017** **பி.வா.சா.2** **01.16 PM – 01.54 PM**

**குறுக்கு விசாரணை** –

1. என்னை நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க சம்மன் ஏதும் வந்ததா என்றால் இல்லை. யார் அழைத்ததன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் பிரதிவாதி சிவசந்திரன் கூறினார் அதன் பெயரில் சாட்சி அளிக்கிறேன். சிவசந்திரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் என்னுடைய மச்சான் ஆவார். பிரதிவாதி என்னுடைய மச்சான் என்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஏன் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் தெரிவித்திருக்கிறேன்.

2. வாதி பெயரில் உள்ள ஒப்பந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதை வாங்கி பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது அவ்வாறு நான் வாங்கிப் பார்த்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கம்பெனியில் தனியார் வேலை செய்கிறேன். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் திருப்பத்தூரில் டீக்கடை நடத்தி வருகிறார்.

3. லோகலக்ஷ்மி என்ற நபரை தெரியுமா என்றால் தெரியும், சிவசந்திரனுக்கு திருமணம் ஆனதிலிருந்து தெரியும். வழக்கறிஞர் திரு.தேவக்குமார் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன், அவர் வீட்டின் கிரகப்பிரவேசத்திற்கு சென்று உள்ளேன். லோகலட்சுமி என்பவர் ரூபினி என்பவருக்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை. பதிவு செய்த பத்திரத்தில் லோகலட்சுமி என்பவரின் கையொப்பம் இல்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. தாவா சொத்தை பொறுத்து சிவசந்திரன் ஒரு மதன் என்பவருக்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி

தர்மபுரியை சேர்ந்த ஒரு மூன்று நபர்களுக்கு எழுதி வைத்த பத்திரத்தில் நான் ஏதாவது சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

5. வழக்கு சொத்தில் எத்தனை மரங்கள் உள்ளன என்றால் சுமார் 450 முதல் 500 மரங்கள் இருக்கும். தாவா சொத்தின் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இன்றைய தேதி வரையிலும் வழக்கு சொத்தானது லோகலட்சுமி என்பவரின் பெயரில் தான் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

6. லோகலட்சுமி என்பவருக்கு எதிராக மஞ்சுளா என்பவர் ஒரு வழக்கு தாக்கல் செய்தார்கள் அந்த வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதி லோகலட்சுமியின் வாரிசு அவர் தான் என்று ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதி கூறியிருக்கிறார் எனக்கு நேரடியாக தெரியாது. வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு சொத்து குறித்து தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.86/2016 வழக்கில் இந்த வாதிக்கு ஆதரவாக உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் சாட்சி கேள்விக்கு நேரடியாக பதில் கூறாமல் உத்தரவு ஆகவில்லை என்றும் ஆகினால் தான் எனக்கு தெரியும் என்று கூறுகிறார்.

7. வாதியிடம் தான் சுவாதீனம் இருந்ததால் தான் நீதிமன்றத்தில் அவருக்கு சாதகமாக உருத்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தானது வாதி லட்சுமிகாந்தம் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண் கூற முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. வாதி லட்சுமி காந்தன் எந்த சர்வே எண்ணில் அனுபவத்தில் இருக்கிறார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதேபோல் பிரதிவாதி எந்த சர்வே எண்ணில் இருக்கிறார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் ஞாபகம் இல்லை.

8. சிவசந்திரன் என்பவர் தருமபுரியை சார்ந்த நபர்களுக்கு விற்ற பிறகு பிரதிவாதி சிவசந்திரன் சுவாதனத்தில் இருக்கிறார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல இன்னும் சிவசந்திரன் பெயரில் தான் உள்ளது என சாட்சி மேலும் கூறுகிறார். லோகலக்ஷ்மி என்பவரை வழக்கறிஞர் திரு.தேவக்குமார் என்பவர் தனது வீட்டில் வைத்து கட்டாயப்படுத்தி கையொப்பம் பெறப்பட்டதாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. சிவசந்திரன் மற்றும் ரூபினி பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி நேரடியாக பதில் கூறாமல் ரத்து செய்யப்படவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதி கேட்டுக்

கொண்டதற்கு இணங்க நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. வழக்கு சொத்தானது வாதியின் சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்றாலும், பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்தததது இல்லை என்றாலும் சரியல்ல பிரதிவாதி தான் சுவாதீனத்தில் இருக்கிறார்.

10. வழக்கு சொத்திற்கு நான் நேரடியாக சென்றதில்லை என்றாலும் வழக்கு சொத்தில் எத்தனை தென்னை மரங்கள் மற்றும் மாமரங்கள் இருக்கிறது என்ற விவரமும் எனக்கு சரியாக தெரியவில்லை என்றாலும் சரியல்ல. லோகலக்ஷ்மி என்பவரின் கையொப்பம் இல்லாமலும் வழக்கு சொத்தில் உள்ள மரங்கள் குறித்த விவரங்கள் சரியாக குறிப்பிடாமல் தவறாக ஒரு ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் வாதி கோரிய படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.